**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், ஏற்காடு.**
**முன்னிலை – திரு. இரா. இளஞ்செழியன், பி.ஏ., எல்.எல்.பி.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**ஏற்காடு.**

**2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 30–ம் நாள் செவ்வாய்கிழமை**
**அசல் வழக்கு எண். 13/2022**
**(CNR.No.TNSA21-000029-2022)**

1. P. ஸ்ரீசந்திரசேகரன் ...வாதி

/ எதிர் /

1. சின்ன அண்ணாமலை
2. குப்புசாமி
3. R. மணியம்மாள்
4. சந்தரா ...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலத்தில் கடந்த 15.04.2014–ம் தேதியன்று அசல் வழக்கு எண்.328/2014 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு கடந்த 13.03.2022–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 29.06.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக

வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.மெய்கண்ட மூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சௌந்தர்பாட்ஷா, அவர்களும், ஆஜராகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி சான்றாவாணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்:–

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்தானது பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம், தனித்துவ சுவாதீனம் வேண்டியும் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1). வழக்குரை சுருக்கம்:–</u>**

வாதி சமர்பித்துள்ள A–அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மற்றும் இதர சொத்துக்கள் வாதியின் பாட்டி குப்பாகவுண்டச்சி (எ) குப்பாயி மற்றும் அவரது மகன்களுக்குச் சொந்தமானவை என்றும், அவர்கள் கடந்த 04.04.1975 மற்றும் 23.08.1996–ம் தேதியிட்ட விற்பனைப் பத்திரங்களின் கீழ் இதற்கான உரிமைகளைப் பெற்றனர் என்றும், அவர்கள் மேற்பட

சொத்துக்களைக் கூட்டு அனுபவத்திலும் உபயோகத்திலும் வைத்திருந்தனர் என்றும், வாதி கடந்த 04.04.1975 மற்றும் 23.08.1996-ம் தேதியிட்ட விற்பனைப் பத்திரங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை இத்துடன் தாக்கல் செய்துள்ளார் அதை இவ்வழக்கின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டுமென்றும், வாதி சம்ர்ப்பித்துள்ள வாதியின் பாட்டி குப்பாகவுண்டச்சி @ குப்பாயி மற்றும் வாதியின் தந்தை பொன்னுசாமி ஆகியோர் கடந்த 14.03.2013-ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரத்தின் மூலம் 'A' அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மற்றும் இதர சொத்துக்களை வாதிக்கு வழங்கினர் என்றும், இந்த செட்டில்மென்ட் பத்திரம் வாதியின் பாட்டி குப்பாகவுண்டச்சி @ குப்பாயி மற்றும் பொன்னுசாமி ஆகியோரால் வாதிக்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்டது என்றும், செட்டில்மென்ட் செய்யப்பட்ட தேதியிலிருந்து 'A' அட்டவணைச் சொத்து மற்றும் இதர சொத்துக்கள் வாதியின் வசம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகின்றன என்றும், வாதி 14.03.2013-ம் தேதியிட்ட அசல் செட்டில்மென்ட் பத்திரத்தை

இத்துடன் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் அது இந்த வழக்கின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டும்.

2). செட்டில்மென்ட் பத்திரம் எழுதப்பட்ட நாளிலிருந்து A அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மற்றும் இதர சொத்துக்களை வாதி அனுபவித்து வருகிறார் என்றும், அரசு வாதியின் பெயரில் அவர் ஒரு குறு விவசாயி என்று சான்றிதழ் வழங்கியுள்ளது என்றும், கடந்த 14.03.2013–ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்திற்கு முன்னதாக, வாதிக்கு சொத்தை வழங்கியவர்களான குப்பாகவுண்டச்சி (எ) குப்பாயி மற்றும் பொன்னுசாமி ஆகியோரும், A அட்டவணை சொத்தை கூட்டு அனுபவத்தில் வைத்திருந்தனர் என்றும் வாதி அந்த அசல் சான்றிதழை தாக்கல் செய்துள்ளார் மேலும், அதை இந்த வழக்கின் ஒரு பகுதியாக கருதப்பட வேண்டும் என்றும், வாதி வழக்கு சொத்திலிருந்து வெளியே இருந்தபோது பிரதிவாதிகள் 2013–ம் ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில் A அட்டவணை சொத்தின் ஒரு பகுதியில் அத்துமீறி நுழைந்து கட்டுமானத்தை தொடங்கினார் என்றும், பிரதிவாதிகளால் அத்துமீறி நுழையப்பட்ட சொத்தை B

அட்டவணை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகளுக்கு B அட்டவணை சொத்தில் நுழைவதற்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும், வாதி தனது கிராமத்தற்கு திரும்பி வந்து பிரதிவாதிகளின் இந்த அத்துமீறல்கள் குறித்துக் கேட்டபோது, பிரதிவாதிகள் B அட்டவணை சொத்தில் வாதிக்கு உள்ள உரிமையை மறுத்து விட்டார் என்றும், எனவே வாதி வழக்கைத் தாக்கல் செய்து B அட்டவணை சொத்தின் மீதான உரிமையை அறிவிக்கவும், அதன் சுவாதீனத்தை ஒப்படைக்கவும் மற்றும் B அட்டவணை சொத்தில் பிரதிவாதிகளால் சட்ட விரோதமாக கட்டப்பட்ட கட்டுமானங்களை அகற்ற கட்டாய உத்தரவு கோரி நீதிமன்றத்தை நாடியுள்ளார் என்றும், வாதி ஒரு வரைப்படத்தை இத்துடன் தாக்கல் செய்துள்ளார்.

3). இந்த வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் முதல் பிரதிவாதி சின்ன அண்ணாமலை கடந்த 26.03.2018–ம் தேதியன்று காலமானார் என்றும், அவர் தனது மகன் 2–வது பிரதிவாதி மற்றும் இரண்டு மகள்களை 3 மற்றும் 4–வது பிரதிவாதிகளை இந்த வழக்கின் வாரிசுதாரர்களாக விட்டுச் சொன்றார் என்றும், எனவே, 3 மற்றும் 4–வது பிரதிவாதிகள் இந்த வழக்கில் அவசியமான

தரப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், வாதி இ.ம.எண்.2/2023 என்ற இடைக்கால மனுவைத் தாக்கல் செய்தார் என்றும், அது கடந்த 21.08.2023–ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டது என்றும், எனவே வழக்கின் சரியான மற்றும் முழுமையான விசாரணைக்காக 3 மற்றும் 4–வது பிரதிவாதிகள் இதில் தரப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், கடந்த 14.03.2013–ம் தேதியன்று வாதியின் பாட்டி குப்பாகவுண்டச்சி @ குப்பாயி மற்றும் வாதியின் தந்தை பொன்னுசாமி கவுண்டர் ஆகியோர் வாதிகக் சாதகமாக செட்டில்மென்ட் பத்திரத்தை எழுதி வைத்தபோது இவ்வழக்கிற்கான காரணம் உருவானது என்றும், மேலும் மே 2013–ன் முதல் வாரத்தில் சேலம் மாவட்டம் ஏற்காடு தாலுக்கா வாழவந்தி கிராமம் மற்றும் அஞ்சல் முகவரியில் அமைந்துள்ள இந்த மதிப்பிற்குரிய நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வரும் B அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்குள் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து அதில் சட்டவிரோத கட்டுமானங்களை எழுப்பினர் என்று குறிப்பிட்டுள்ளார்.

**4). 1–வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் விளக்கம்:**

மேற்படி தாவா வழக்கானது பொய்யானது, அற்பமானது, உள்நோக்கம் கொண்டது மற்றும் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், இந்த பதிலுரையில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டவை தவிர வழக்கின் மற்ற அனைத்துக் கூற்றுக்களையும் இந்த பிரதிவாதி திட்டவட்டமாக மறுக்கிறார் என்றும், வாதியின் சங்கதிகளுக்கு அவரே முறையான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், A அட்டவணை சொத்து மற்றும் இதர சொத்துக்கள் முதலில் வாதியின் பாட்டி குப்பாகவுண்டச்சி @ குப்பாயி மற்றும் அவரது மகன்களுக்கு சொந்தமானது என்பதும், அவர்கள் கடந்த 04.04.1975 மற்றும் 23.08.1996–ம் தேதியிட்ட விற்பனைப் பத்திரங்கள் மூலம் உரிமைகளைப் பெற்றனர் என்பது பொய்யானது என்றும், அவர்கள் அந்தச் சொத்துக்களைக் கூட்டு அனுபவத்திலும் உபயோகத்திலும் வைத்திருந்தனர் என்று சொல்வது முற்றிலும் பொய்யானது என்றும், வாதியின் பாட்டி குப்பாகவுண்டச்சி @ குப்பாயி மற்றும் வாதியின் தந்தை பொன்னுசாமி ஆகியோர் கடந்த 14.03.2013–ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் வாதிக்கு A அட்டவணைச் சொத்துக்களை வழங்கினர் என்பதும், அந்தச்

செட்டில்மென்ட் பத்திரத் தேதியிலிருந்து வாதி அந்தச் சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்பதும் பொய்யானது.

5). வாதி ஒரு குறு விவசாயி என அரசால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் சான்றிதழ் இந்த வழக்கிற்கு எந்த வகையிலும் சம்மந்தம் இல்லை என்றும், வாதி குப்பாகவுண்டச்சி @ குப்பாயி மற்றும் பொன்னுசாமி ஆகியோரும் வழக்கு A அட்டவணை சொத்துக்களைக் கூட்டு அனுபவத்திலும் உபயோகத்திலும் வைத்திருந்தனர் என்பது பொய்யானது என்றும், வாதி வழக்கு சொத்திலிருந்து வெளியே இருந்தபோது பிரதிவாதிகள் 2013–ம் ஆண்டு மே முதல் வாரத்தில் A அட்டவணை சொத்தின் ஒரு பகுதியில் அத்துமீறி நுழைந்து கட்டுமானங்களை எழுப்பினார் என்று கூறுவது பொய்யானது என்றும், அத்துமீறிப்பட்டதாக கூறப்படும் பகுதி B அட்டவணை சொத்து என்று விவரிக்கப்படுவதும் பொய்யானது என்றும், மேலும் B அட்டவணை சொத்து என்பது A அட்டவணை சொத்தின் ஒரு பகுதி என்பதும் பொய்யானது என்றும், வாதி திரும்பி வந்த பிறகு இந்த அத்துமீறல் குறித்து பிரதிவாதிகளிடம் கேட்டதாகவும், அதற்கு பிரதிவாதிகள் வாதியின் உரிமையை மறுத்ததாகவும் கூறுவது பொய்யானது என்றும்,

வாதுரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடம் உண்மை நிலையை பிரதிபலிக்கவில்லை என்றும், அதன் உண்மை தன்மை ஏற்றுக்கொள்ளளும் படி இல்லை என்றும், வழக்கின் வரைபடத்தின்படி வாதிக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் சொத்து, ஏற்காடு தாலுக்கா, வாழவந்தி கிராமத்தின் சர்வே எண்.18/12–ல் உள்ளது என இந்த பிரதிவாதி சமர்ப்பிக்கிறார் என்றும், ஆனால் சர்வே எண்கள் 18/9, 18/11 மற்றும் 18/13–ல் உள்ள நிலங்களுக்கு இந்த பிரதிவாதியே முழுமையான உரிமையாளர் என்றும், பிரதிவாதி தனது சொத்தின் எல்லைக்குள்ளேயே இருக்கிறார் என்றும், அவர் வழக்கு A அட்டவணை சொத்துக்குள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிக்கவில்லை என்றும், இந்த பிரதிவாதி தனது எல்லைக்குள்ளேயே சரியாக இருக்கிறார் என்றும், இந்த பிரதிவாதி வாதியின் 5 சென்ட் நிலத்தை ஆக்கிரமிக்கவில்லை.

6). பிரதிவாதி வாதியின் எந்த நிலத்தையும் ஆக்கிரமிக்காததால், மேற்படி வழக்கிற்கு ஆதாரக் காரணம் ஏதுமில்லை என்றும், இந்த வழக்கு சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை என்றும், கனம் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி

செய்து, செலவுத் தொகையை வழங்கியும் நீதி வழங்க வேண்டும் என்று இந்த பிரதிவாதி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**7). 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் விளக்கம்:**

மேற்படி தாவா வழக்கானது பொய்யானது, அற்பமானது, உள்நோக்கம் கொண்டது மற்றும் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், இந்த பதிலுரையில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டவை தவிர வழக்கின் மற்ற அனைத்துக் கூற்றுக்களையும் இந்த பிரதிவாதி திட்டவட்டமாக மறுக்கிறார் என்றும், A அட்டவணை சொத்து மற்றும் இதர சொத்துக்கள் முதலில் வாதியின் பாட்டி குப்பாகவுண்டச்சி @ குப்பாயி மற்றும் அவரது மகன்களுக்கு சொந்தமானது என்பதும், அவர்கள் கடந்த 04.04.1975 மற்றும் 23.08.1996-ம் தேதியிட்ட விற்பனைப் பத்திரங்கள் மூலம் உரிமைகளைப் பெற்றனர் என்பது பொய்யானது என்றும், அவர்கள் அந்தச் சொத்துக்களைக் கூட்டு அனுபவத்திலும் உபயோகத்திலும் வைத்திருந்தனர் என்று சொல்வது பொய்யானது என்றும், வாதியின் பாட்டி குப்பாகவுண்டச்சி @ குப்பாயி மற்றும் வாதியின் தந்தை பொன்னுசாமி ஆகியோர் கடந்த

14.03.2013–ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரத்தின் மூலம் வாதிக்கு A அட்டவணைச் சொத்துக்களை வழங்கினர் என்பதும், அந்தச் செட்டில்மென்ட் பத்திரத் தேதியிலிருந்து வாதி அந்தச் சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்பதும் பொய்யானது. வாதி வழக்கு சொத்திலிருந்து வெளியே இருந்தபோது பிரதிவாதிகள் 2013–ம் ஆண்டு மே முதல் வாரத்தில் A அட்டவணை சொத்தின் ஒரு பகுதியில் அத்துமீறி நுழைந்து கட்டுமானங்களை எழுப்பினார் என்று கூறுவது பொய்யானது என்றும், வாதி திரும்பி வந்த பிறகு இந்த அத்துமீறல் குறித்து பிரதிவாதிகளிடம் கேட்டதாகவும், அதற்கு பிரதிவாதிகள் வாதியின் உரிமையை மறுத்ததாகவும் கூறுவது பொய்யானது என்றும், வாதுரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடம் உண்மை நிலையை பிரதிபலிக்கவில்லை என்றும், அதன் உண்மை தன்மை ஏற்றுக்கொள்ளளும் படி இல்லை.

8). வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1–வது பிரதிவாதி கடந்த 26.03.2018–ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், 3–வது மற்றும் 4–வது பிரதிவாதிகள் 2–வது பிரதிவாதியின் தங்கைகள்

என்றும், 3–வது மற்றும் 4–வது பிரதிவாதிகள் 1–வது பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசுகளாக சேர்க்கப்பட்டனர் என்றும், அவர்கள் இந்த வழக்கில் அவசியமான தரப்பினராக உள்ளனர் என்றும், கடந்த 24.08.2015–ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட் செட்டில்மென்ட் பத்திரத்தின்படி, சர்வே எண்கள். 18/9, 18/11 மற்றும் 18/13–ல் உள்ள நிலங்களுக்கு 2–வது பிரதிவாதியான சி.குப்புசாமி என்பவர் முழுமையான உரிமையாளர் ஆவார் என்றும், இந்த செட்டில்மென்ட் பத்திரம் இறந்து போன 1–வது பிரதிவாதியால் 2–வது பிரதிவாதிக்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்டது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரம் இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதிக்கு சொந்தமானது என்ற கூறப்படும் சொத்து, வழக்கின் வரைபடத்தின்படி வாழவந்தி கிராமத்தின் சர்வே எண். 18/2–ல் உள்ளது என்றும், சர்வே எண்கள்: 18/9, 18/11 மற்றும் 185/13–ல் உள்ள நிலங்களுக்கு 2–வது பிரதிவாதியே முழுமையான உரிமையாளர் ஆவார் என்றும், இது இறந்துபோன 1–வது பிரதிவாதியால் கடந்த 24.08.2015–ம் தேதியன்று 2–வது பிரதிவாதியான சி.குப்புசாமிக்கு எழுதி

கொடுக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரத்தின்படி ஆகும் என்றும், பிரதிவாதி தனது சொத்தின் எல்லைக்குள்ளேயே இருக்கிறார் என்றும், அவர் A அட்டவனை சொத்திற்குள் அத்துமீறி நுழையவில்லை என்றும், வாதியின் 5 சென்ட் நிலத்தை ஆக்கிரமிக்கவில்லை.

9). இரண்டாம் பிரதிவாதி வாதியின் எந்த நிலத்தையும் ஆக்கிரமிக்காததால், இந்த வழக்கிற்கு எந்தக் காரணமும் இல்லை. வழக்கு சரியாக மதிப்பிடவில்லை என்றும், எனவே கனம் நீதிமன்றம் மேற்படி வழக்கினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து நீதியை நிலை நாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10). வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரை வாதி தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்தும், இந்நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.மா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11). பிரதிவாதிகள் தரப்பில் 2–ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>12). எழுவினாக்கள்:</u>**

1. Whether the plaintiffs are entitled to seek declaration over the suit property?
2. whether the plaintiffs are entitled to get mandatory injunction over the suit property ?
3. what are the further relief plaintiff entitled for ?

**<u>13). எழுவினா 1–ற்கான தீர்வு:</u>**

வாதி தரப்பில் தாவா சொத்தில் தனக்குள்ள உரிமை குறித்தும் சுவாதீனம் மற்றும் அனுபவம் குறித்து நீதிமன்றத்தில் நிரூபணம் செய்துள்ளதாகவும் பிரதிவாதி தாவா B அட்டவணை சொத்தில் 0.05 விஸ்தீரனத்திற்கு அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றும், மேற்படி சங்கதியானது நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே தாவாவினை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என வாதி தரப்பில் வாதிடப்பட்டது.

14). பிரதிவாதி தரப்பில் வழக்கில் உரிய உத்தரவினை பிறப்பிறக்குமாறு வாதிடப்பட்டது.

15). வழக்கு B அட்டவணை சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டதா என்பதனை குறித்து பார்க்கையில் B அட்டவணை சொத்து அமைந்துள்ள A அட்டவணை சொத்தானது வாதி வழக்குரையில் குறிப்பிட்டபடி அவரது பாட்டியான குப்பாகவுண்டச்சி என்கின்ற குப்பாயி என்பவருக்கு 04.04.1975 மற்றும் 23.08.1996 தேதியிட்ட விற்பனை பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது என்றும், அதற்கு ஆதரவாக வாதி தரப்பில் வ.சா.ஆ.1 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

16). A அட்டவணை சொத்தானது வாதிக்கு அவரது பாட்டியான குப்பாகவுண்டச்சி என்கின்ற குப்பாயி மற்றும் அவரது தந்தை பொன்னுசாமி ஏற்படுத்திக் கொடுத்த விற்பனை ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்றும், தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்ததில் இருந்து வாதி தாவா சொத்தில் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகின்றார் என்பதற்கும் ஆதரவாக வ.சா.ஆ.3 முதல் வ.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யபட்டுள்ளன. வாதி, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் தாவா சொத்துக்குரிய செக்குபந்தி விவரம் குறித்தும்

தெளிவாக சாட்சியமளித்துள்ளார். மேலும், தாவா சொத்தில் வாதிகள் அனுபவம் மற்றும் சுவாதீனத்தினை மறுக்கும் விதமாக பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

17). பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், **"வாதியின் சர்வே எண்.18/12 என்றும் என்னுடையது சர்வே எண்.18/13 என்றால் சரிதான்"** என்று சாட்சி அளித்துள்ளார். தாவா A அட்டவணை சொத்தாக வாதி தரப்பில் சர்வே எண்:18/12 கட்டப்பட்டுள்ளது. தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியபட்டது என்று ஒப்புக்கொண்டு சாட்சியளித்துள்ளார்.

18). மேலும் பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் சுவாதீனம் மற்றும் அனுபவம் செய்து வருகின்றனர் என்றும் தாவா சொத்தானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்துள்ள நிலையில் அதனை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வகை ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதியே தாவா சொத்தில் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்று ஆவணங்கள் மூலம்

நிருபணம் செய்துள்ளார் என்று வாதிக்கு வழக்கு சொத்திற்க்கு உரிமையுடையவர் என்று வாதிக்கு ஆதரவாகவும் பிரதிவாதிக்கு எதிராகவும் எழுவினா தீர்வு காணப்படுகிறது.

19). எழுவினா 2–க்கான தீர்வு :

தாவா சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்தது குறித்து வாதியால் போலீசில் புகார் கொடுக்கப்பட்டு அந்த மனு ரசீதானது வ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையிலும் மே மாதம் 2023–ம் வருடம் பிரதிவாதிகள் தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்தது குறித்து காவல் நிலையத்தில் மனு கொடுக்கப்பட்டது என சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

20). மேலும் இந்நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் 7–வது பத்தியில் **பிரதிவாதி வாதிக்கு சொந்தமான தாவா சொத்தில் 5 சென்ட் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவாக இந்நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.மா.சா.ஆ.1–க குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில், மேற்படி நீதிமன்ற

ஆணையரின் அறிக்கை குறித்து எனது தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

21). நீ.மா.சா.ஆ.1 மற்றும் வ.சா.ஆ.12 ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பிரதிவாதி வாதியின் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்திருப்பதும், அதனை ஆட்சேபனை செய்யும் விதமாக பிரதிவாதி தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இந்நீதிமன்றத்தில் தெரிவிக்கபடவில்லை. தாவா சொத்தானது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதனை நிரூபணம் செய்யும் வகையிலும் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. வாதி தரப்பில் தாவா B அட்டவணை சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளது வாதி தரப்பில் நிரூபணம் செய்யபட்டுள்ளதாக முடிவு செய்யபடுகிறது. எழுவினா 1 மற்றும் 2–க்கு மேலே விடை கண்டுள்ளதன் படி தாவா சொத்து வாதிக்கு உரிமை உள்ளது என்றும் வாதியை சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து உள்ளார் என்றும் நிரூபணம் செய்துள்ளார்.

22). முடிவாக , தாவா B அட்டவணை சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், தாவா B அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் செய்துள்ள ஆக்கிரமிப்பினை இரண்டு மாதத்திற்குள் காலி செய்து தாவா சொத்தினை வாதிகள் வசம் ஒப்படைக்க வேண்டும் என தவறும்பட்சத்தில் இந்நீதிமன்ற நடவடிக்கையில் அகற்றப்படும் என்று செயலுறுத்துக்கட்டளை வழங்கியும் தீர்ப்பளிக்கபடுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 30–ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/–.இரா.இளஞ்செழியன்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீத்துறை நடுவர்,**
**ஏற்காடு.**

**<u>வாதியின் தரப்பு சாட்சிகள்:–</u>**

1. **வா.சா.1** – ஸ்ரீசந்திரசேகரன்.

**<u>பிரதிவாதியின் தரப்பு சாட்சிகள்:–</u>**

1. **பி.வா.சா.1** – குப்புசாமி.

**<u>வாதியின் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

1. வா.சா.ஆ–1 -- 04.04.1975–ம் தேதியிட்ட கிரயப்பத்திரம் பத்திரம் – சான்று நகல்.
2. வா.சா.ஆ.2 -- 12.03.1980–ம் தேதியிட்ட கிரயப்பத்திரம் – சான்று நகல்.
3. வா.சா.ஆ.3 -- 14.03.2013–ம் தேதியிட்ட வாதியின் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் பத்திரம் – அசல்
4. வா.சா.ஆ.4 -- குறு விவசாயி என்று அரசாங்கத்தால் வாத்திக்குவழங்கப்பட்ட சான்று – அசல்
5. வா.சா.ஆ.5 -- 11.12.2018–ம் தேதியிட்ட வாதியின் பெயரிலுள்ள கணினி பட்டா – கணினி நகல்.
6. வா.சா.ஆ.6 -- 01.03.2013–ம் தேதியிட்ட வாதியின் பெயரிலுள்ள நிலவரி ரசீது – அசல்.
7. வா.சா.ஆ.7 -- 10.02.2019–ம் தேதியிட்ட FMB Plan – சான்றிட்ட நகல்.
8. வா.சா.ஆ.8 -- 08.08.2016–ம் தேதியிட்ட அடங்கல் – சான்றிட்ட நகல்.
9. வா.சா.ஆ.9 -- 15.02.2018–ம் தேதியிட்ட சர்வே எண். 7/26, 15/6, 15/8, 15/9, 15/11, 18/பி, 18/6, 18/12, 18/17, 18/19, 36/29, 49/2ஏ கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அனுபவ சான்றிதழ் – சான்றிட்ட நகல்.
10. வா.சா.ஆ.10 -- 27.06.2019–ம் தேதியிட்ட சர்வே எண். 18/12 கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அனுபவ சான்றிதழ் – சான்றிட்ட நகல்.
11. வா.சா.ஆ.11 -- 21.01.2019–ம் தேதியிட்ட அரசாங்கத்தால் வாதிக்கு வழங்கப்பட்ட சிறு/குறு விவசாய சான்றிதழ் – கணினி நகல்.
12. வா.சா.ஆ.12 -- 27–12–2012–ம் தேதியிட்ட பிரதிவாதிகள் மீது வாதி ஏற்காடு காவல் நிலையத்தில் கொடுத்த

புகார் மனுவிற்கு கொடுக்கப்பட்ட CSR ரசீது – அசல்.

1. நீ.சா.ஆ.1 –– நீதிமன்ற ஆணையரின் அறிக்கை – அசல்.

**<u>பிரதிவாதியின் தரப்பு சான்றாவணங்கள்:</u>–**

**இல்லை.**

**ஒம்/–.இரா.இளஞ்செழியன்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீத்துறை நடுவர்,**
**ஏற்காடு.**